**புதுச்சேரி சுகாதாரத்துறை சார்பில் நடைபெறும் சுகாதாரத் திருவிழாவில் துணைநிலை ஆளுநர் திரு K. கைலாஷ்நாதன் அவர்களின் உரை**

இடம் - காமராசர் மணிமண்டபம். தேதி – 28-02-2025

அனைவருக்கும் வணக்கம்!

புதுச்சேரி அரசு சார்பில் நடைபெறும் சுகாதாரத் திருவிழாவில் கலந்துகொள்வதில் பெருமை அடைகிறேன். மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு கல்வியும் பொருளாதார வளர்ச்சியும் எந்த அளவுக்கு முக்கியமோ அந்த அளவுக்கு சுகாதாரமும் முக்கியமாக இருக்கிறது. ஏனென்றால், ஒரு நாடு வளர்ச்சி பெற வேண்டும் என்றால் குடிமக்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டும்.

மக்களின் நலனுக்காக மத்திய-மாநில அரசுகள் சுகாதாரத் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. இந்த திட்டங்களைப் பற்றி மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி, அனைவருக்கும், குறிப்பாக எழை-எளிய, சாமானிய மக்களுக்கு அடிப்படை சுகாதார சேவைகள் கிடைக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டு இந்த சுகாதார திருவிழா நடத்தப்படுகிறது.

அதற்காக, இந்த விழாவை எற்பாடு செய்த சுகாதாரத் துறைக்கு எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். நடைமுறையில் உள்ள சுகாதாரத் திட்டங்களின் பயன், அவற்றை பயன்படுத்திக் கொள்ளும் முறை போன்றவற்றை மக்களுக்கு எடுத்துச் சொல்ல ஒரு வாய்ப்பாக இது இருக்கிறது.

உலக சுகாதார அமைப்பு மூன்று விதமான வளர்ச்சி இலக்குகளை முன் வைக்கிறது. ஒன்று, 2030-க்குள் வறுமையை ஒழிப்பது. இரண்டாவது- 2030-க்குள் பசியையும் ஊட்டச்சத்து குறைபாட்டையும் ஒழிப்பது. மூன்றாவது- வயது வித்தியாசம் இல்லாமல் அனைவருக்கும் ஆரோக்கிமான வாழ்க்கையை ஏற்படுத்தித் தருவது. இந்த மூன்று இலக்குகளையும் கவனத்தில் கொண்டு பொதுமக்களின் நலன் கருதி, மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையிலான மத்திய அரசு எத்தனையோ சுகாதாரத் திட்டங்களை கொண்டு வந்திருக்கிறது. உயர்தர மருத்துவ சிகிச்சை இலவசமாக அல்லது குறைந்த செலவில் அனைத்து மக்களுக்கும் கிடைக்கும் வகையில் தேசிய அளவிலான சுகாதாரத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

**ஆயுஷ்மான் பாரத்** – பாரதப் பிரதமரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் (PM-JAY) ஒரு வரப் பிரசாதம். இது உலகின் மிகப்பெரிய சுகாதாரக் காப்பீடு திட்டம். வறுமைக் கோட்டுக்குகீழ் வாழும் குடும்பத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5 லட்சம் வரை மருத்துவச் செலவை அரசு ஏற்கிறது. இதனால் ஏழ்மை நிலையில் உள்ளவர்களும் உயர்தரமான சிகிச்சை பெற முடிகிறது. இந்த திட்டம் ஆரோக்கியமான வாழ்க்கை பற்றிய ஒரு நம்பிக்கையை அனைவருக்கும் ஏற்படுத்தி இருக்கிறது.

அன்மையில், 70 வயதுக்கும் மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கு வருமான உச்சவரம்பு எதுவும் இல்லாமல்

...3/-

இந்த ஆயுஷ்மான் பாரத் திட்டம் விரிவு படுத்தப்பட்டு இருக்கிறது. அவர்கள் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5 லட்சம் வரை மருத்துவக் காப்பீடு பெற முடியும். இதனால் இந்தியாவில் உள்ள சுமார் 6 கோடி மூத்த குடிமக்கள் பயனடைவார்கள். பாரதப் பிரதமரின் மக்கள் மருந்தகத் திட்டம் குறைந்த விலையில் தரமான மருந்தகள் கிடைக்கச் செய்கிறது.

பாரதப் பிரதமரின் **தாய்மார்கள் ஆராதனை திட்டம்** - (PMMVY) கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதி உதவியும் ஊட்டச்சத்தும் வழங்கும் திட்டம். **மிஷன் இந்திரதனுஷ்** திட்டம் - குழந்தைகளுக்கும் கர்ப்பிணிப் பெண்களுக்கும் இலவச தடுப்பூசி போடும் திட்டம். 12 வகையான நோய்களைத் தடுக்க இந்த தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. **தேசிய ஊட்டச்சத்து** இயக்கத்தை எடுத்துக் கொண்டால் குழந்தைகள், சிறுவர்களுக்கு இருக்கும் ஊட்டச்சத்து குறைபாட்டை போக்குகிறது எடைகுறைவு, ரத்த சோகை வராமல் தடுக்கிறது.

இந்த நேரத்தில், பாரதப் பிரதமரின் தொலை நோக்குப் பார்வையோடு கொண்டு வந்த **தூய்மை இந்தியா** திட்டத்தை பற்றி குறிப்பிட விரும்புகிறேன். மக்களின் வாழ்க்கை முறை, சமூக பாதுகாப்பு வகையில் நாட்டில் மிகப் பெரிய புரட்சியை இது ஏற்படுத்தியது. அதற்காக பாரதப் பிரதமருக்கு நாம் நன்றி சொல்லியாக வேண்டும். திறந்தவெளி கழிப்பிடங்களை ஒழித்து, சுகாதார வசதிகளை மேம்படுத்த இந்த திட்டம் வழி வகுத்தது.

மத்திய அரசு கொண்டு வந்த இது போன்ற திட்டங்களால் கடந்த பத்து ஆண்டுகளில் மக்களின்

வாழ்க்கை முறையில் மிகப் பெரிய வளர்ச்சி ஏற்பட்டு இருக்கிறது. மனித வளர்ச்சிக் குறியீடுகளில் நாடு முன்னேற்றம் அடைந்து இருக்கிறது. இதில், மத்திய அரசின் வளர்ச்சி அடைந்த பாரதம் - விழிப்புணர்வு இயக்கத்தின் பங்களிப்பை நான் மறுக்க முடியாது.

புதுச்சேரி அரசு, சுகாதார சேவையில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்பதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறேன். தேசிய அளவில் சுகாதாரத் திட்டங்கள் பலவற்றில் முன்னோடி மாநிலமாக செயல்படுகிறது. சுகாதாரத் திட்டங்களை செயல் படுத்துவதில் மத்திய மாநில அரசுகள் முனைப்போடு செயல்பட்டாலும் இந்த திட்டங்கள் முழுமையாக வெற்றி பெற அவற்றைப் பற்றிய முழுமையான விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்த வேண்டியது அவசிமாக இருக்கிறது.

இங்கே நடத்தப்படுவது போல புதுச்சேரியின் மற்ற பகுதிகளிலும் இந்த சுதாதார திருவிழாவை நடத்த சுகாதாரத்துறை அதிகாரிகள் ஏற்பாடு செய்ய வேண்டும். இது போன்ற நிகழ்ச்சிகள் ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்கும் நம்முடைய முயற்சிக்கு வலு சேர்த்து, பாரதப் பிரதமர் சொல்லும் VIKSIT BHARAT @ 2047 வளர்ச்சி அடைந்த பாரதத்தை உருவாக்க உதவும் என்ற நம்பிக்கையோடு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

**நன்றி! வணக்கம் !!!**